10ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத்தேர்வு-2019

(வினாத்தாள் விடைகளுடன்)

## தமிழ் முதல் தாள்

நேரம் : 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 14)

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். [14 × 1 = 14]

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. “அன்னை மொழியே” கவிதை இடம் பெறும் நூல்

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

2. “பாட்டுக்கொரு புலவன்” எனப் பாராட்டப்பட்டவர்.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வாணிதாசன் ஈ) கண்ணதாசன்

3. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?

அ) பாவாணர்
ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார்
ஈ) திரு.வி.க

4. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -

அ) இலையும் சருகும்
ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும்
ஈ) சருகும் சண்டும்

5. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்

அ) திருமூலர்
ஆ) அகத்தியர்
இ) வள்ளுவர்
ஈ) தொல்காப்பியர்

6. இனிய வாசனையுடன் வா என்று பாரதி அழைத்தது யாரை?

அ) காற்று ஆ) மேகம்
இ) குழந்தை ஈ) அருவி

7. சரியான கருத்தைக் கண்டறிக.

i) தான் மட்டும் உண்பது என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை

ii) விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

iii) நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியம்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.

அ) (i) சரி
ஆ) (ii), (iii) சரி
இ) மூன்றும் சரி
ஈ) மூன்றும் தவறு

8. நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?

அ) கொன்றைவேந்தன்
ஆ) காசிக்கலம்பகம்
இ) வெற்றிவேற்கை
ஈ) காசிக்காண்டம்

9. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?

அ) 483 ஆ) 543
இ) 583 ஈ) 643

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (10,11,12,13,14) விடை தருக.**

நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட் புலம்புஅகல இனிய கூறிப்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



பருஉக்குறை பொழிந்த நெய்கண் வேவையோடு
குரூஉக்கண் இறடிப்பொம்மல் பெறுகுவிர்

10. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
 அ) பரிபாடல்
 ஆ) முல்லைப்பாட்டு
 இ) மலைபடுகடாம்
 ஈ) புறநானூறு

11. 'இறடி' - இச்சொல்லுக்குரிய பொருள் யாது?
 அ) சோறு ஆ) தினை
 இ) இறைச்சி ஈ) அரிசி

12. மலைபடுகடாம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது
 அ) பொருநராற்றுப்படை
 ஆ) சிறுபாணாற்றுப்படை
 இ) கூத்தராற்றுப்படை
 ஈ) பெரும்பாணாற்றுப்படை

13. கெழீஇ- இச்சொல்லில் உள்ள அளபெடை
 அ) உயிரளபெடை
 ஆ) ஒற்றளபெடை
 இ) செய்யுளிசை அளபெடை
 ஈ) சொல்லிசை அளபெடை

14. மலைபடுகடாம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?
 அ) சங்க இலக்கியம் ஆ) பக்திஇலக்கியம்
 இ) காப்பிய இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 20)

### பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** [5 × 2 = 10]

15. 'இலா' என்னும் மென்பொருள் குறித்து எழுதுக.
16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
18. தாவரங்களின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொற்களை யாவை?
19. தென்றல் காற்று குறிப்பு வரைக.
20. விடைக்கேற்ற வினா அமைக்க.
 அ) உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்.
 ஆ) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம்.
21. மொழிப்பெயர்ப்பால் திருக்குறள் அடைந்த பெருமை யாது?

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. (28ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)** [5 × 2 = 10]

22. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?ஏன்?
23. பண்டைய தமிழ்க் கலைஞர்கள் யாவர்?
24. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
25. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்து எழுதுக.

| | |
|---|---|
| முன்னைக்கும் முன்னை | மிகுதியான வணிக்கப்பல்கள் |
| தென்னன் மகளே | நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் |
| மெத்த வணிகலமும் | பழமைக்குப் பழமையாய் |
| நெல்லோடு நாழி கொண்ட | பாண்டிய மன்னனின் மகளே |

26. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்" இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியானான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?
27. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.
28. 'விடும்' என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 50)

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** [3 × 5 = 15]

29. வாழை இலை விருந்து, உணவு பரிமாறும் முறை - குறித்து எழுதுக.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
31. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
32. நான் வீசுகின்ற திசையைக் கொண்டும் தமிழர்கள் எனக்குப் பெயர் சூட்டியுள்ளனர் - இத்தொடர் குறித்து விளக்கி எழுதுக.
33. இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரிக்க.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



## பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** [3 × 5 = 15]

34. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

35. கா.ப.செய்குதம்பிப் பாவலர் சதாவதானி எனப் புகழப்படுவதையும் அதற்கான காரணத்தையும் எழுதுக.

36. ----------------------- 'நெய்க்கண் வேவையோடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

37. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

38. முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல், கரு, உரிப்பொருள்களை எழுது.

## பிரிவு - 3

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க.** [4 × 5 = 20]

39. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) | திருவிளையாடற் புராணம் | அதிவீரராம பாண்டியர் |
| ஆ) | பூத்தொடுத்தல் | திருவள்ளுவர் |
| இ) | பரிபாடல் | பரஞ்சோதி முனிவர் |
| ஈ) | திருக்குறள் | உமா மகேஸ்வரி |
| உ) | காசிக்காண்டம் | கீரந்தையார் |

40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மைச் செய்திகள் சங்க இலக்கியங்கள், பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிற மொழிக்கருத்துகளை, கதைகளை, தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்டவையே.

**வினாக்கள் :**

1. இப்பகுதியில் இடம்பெறும் செப்பேட்டுக் குறிப்பு எவ்வூரைச் சார்ந்தது?
2. வடமொழிக் காப்பியங்கள் யாவை?
3. சங்கக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்ததை எதன் மூலம் அறியலாம்?
4. சங்கம் எங்கு அமைக்கப்பட்டது?
5. வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட காப்பியங்கள் எவை?

41. 'வாளால் அறுத்துச் சுடினும்' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

"சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

42. படம் உணர்த்தும் கருத்துகளை ஐந்து தொடர்களில் நயமுடன் எழுதுக.



## பகுதி - IV (மதிப்பெண்கள் : 16)

**விரிவாக விடையளிக்க.** [2 × 8 = 16]

43. (அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) காற்றின் ஆற்றலையும் காற்றுமாசடைவதையும் காற்றே எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதை விளக்குக.

44. (அ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும், பெருஞ்சித்திரனார் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

☆ ☆ ☆

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



10ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத்தேர்வு-2019

(வினாத்தாள் விடைகளுடன்)

## தமிழ் இரண்டாம் தாள்

(இலக்கணம், துணைப்பாடம்)

நேரம் : 2.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும் படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 14)

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். [14 × 1 = 14]

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   அ) எந் + தமிழ் + நா
   ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா
   ஈ) எந்தம் + தமிழ் + நா

2. 'சிவப்புச்சட்டை பேசினார்' - எவ்வகை தொகைச்சொல்?
   அ) உவமைத்தொகை
   ஆ) அன்மொழித்தொகை
   இ) வினைத்தொகை
   ஈ) பண்புத்தொகை

3. 'பாடினாள் கண்ணகி' - எவ்வகைத் தொடர்?
   அ) வினையெச்சத் தொடர்
   ஆ) விளித்தொடர்
   இ) வினைமுற்றுத் தொடர்
   ஈ) வேற்றுமைத் தொடர்

4. 'என் அம்மை வந்தாள்' - என்பது எவ்வகை வழுவமைதி?
   அ) பால் வழுவமைதி
   ஆ) இட வழுவமைதி
   இ) திணை வழுவமைதி
   ஈ) மரபு வழுவமைதி

5. விடை வகையைக் கூறுக.
   அ) 5 ஆ) 8
   இ) 10 ஈ) 15

6. "சொல்லரும் சூல் பசும்" - இப்பாடலில் பயின்று வரும் பொருள்கோள் யாது?
   அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
   ஆ) நிரல்நிறைப் பொருள்கோள்
   இ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
   ஈ) அளைமறிபாப்புப் பொருள்கோள்

7. கண்ணன் வந்தான் - எவ்வகைத் தொடர்?
   அ) தனிமொழி
   ஆ) தொடர்மொழி
   இ) பொதுமொழி
   ஈ) பெயரெச்சம்

8. 'கெடு' என்னும் சொல் 'கேடு' எனத் திரிவது .......
   அ) வினையாலணையும் பெயர்
   ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்
   இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
   ஈ) விகுதிபெற்ற தொழிற்பெயர்

9. தொடர்மொழி -
   அ) ஆடு மேய்ந்தது ஆ) அருகில்
   இ) அம்மாஅ ஈ) அசையாமை

10. பொருத்தமான விடையைத் தேர்க :
    "இங்கு மாநகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்பது ...... வினா
    "அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறுவது ........ விடை.
    அ) ஐயவினா, வினாஎதிர் வினாதல் விடை
    ஆ) அறியா வினா, சுட்டு விடை

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



இ) அறிவினா, மறைவிடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை

11. 'எழுது என்றான்' என்பதை அடுக்குத்தொடர் இடம்பெறுமாறு மாற்றுக.
அ) எழுதி வா என்றான்
ஆ) எழுது எழுது என்றான்
இ) எழுதி விரைந்து வா என்றான்
ஈ) எழுதிச்சொல் என்றான்

12. மரபுப்பெயருடன் இணைத்து எழுதுக: தென்னந்....
அ) தோட்டம் ஆ) சோலை
இ) தோப்பு ஈ) காடு

13. 'மூதூர்' என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) உவமைத்தொகை
ஆ) அன்மொழித்தொகை
இ) வினைத்தொகை
ஈ) பண்புத்தொகை

14. தீவகம் என்னும் சொல்லுக்கு ............. என்று பொருள்.
அ) விளக்கு ஆ) பூக்கள்
இ) செருக்கு ஈ) நன்மை

## பகுதி - II (மதிப்பெண்கள் : 20)

### பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** [5 × 2 = 10]

15. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். - கலவைச் சொற்றொடராக மாற்றுக.

16. எக்ஸ்பெரிமெண்டை ரிப்பீட் செய்து ஆன்சரை கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட் - பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல் தருக.

17. பசுமையான ............... ஐக்............... கண்ணுக்கு நல்லது. (காணுதல்/காட்சி) - பொருளைப் புரிந்து தொடரை முழுமையாக்குக.

18. இரு சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க: (விதி - வீதி)

19. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க:
(அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
(ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

20. கீரி பாம்பு - மறைந்துள்ள தொகையைக் கண்டுபிடித்து தொடர் அமைக்க.
கண்ணும் கருத்தும், வாழையடி வாழை

21. Emblem, Conversation - கலைச்சொற்களை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு (28ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)** [5 × 2 = 10]

22. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்தெழுதுக.

24. அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)

25. அடுக்குத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.

26. கோடிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக. வெண்டைக்காய் பொரியல் மோர்க்குழம்புக்கு பொருத்தமாக இருக்கும்.

27. நேரடி விடைகள் எவை?

28. பொறித்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 50)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** [2 × 5 = 10]

29. இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் கற்பனையை ஏற்றுக் கூறும் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்கு.

30. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் - அலகிட்டு வாய்பாடு தருக.

31. வினா எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:(37ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)** [4 × 5 = 20]

32. அட்டவணையில் விடுபட்டவற்றைத் தனியே எடுத்தெழுதுக.

| வேர்ச் சொல் | எழுவாயத் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் |
|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | | அருணா ஓடாதே! |
| சொல் | அம்மா சொன்னார் | சொன்ன அம்மா | சொல்லிச் சென்றார் | |
| தா | | தந்த அரசர் | தந்து சென்றார் | |
| பார் | துளிர்ப் பாத்தாள் | | பார்த்துச் சிரித்தாள் | துளிர் பார்க்காதே! |

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



33. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க:
(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)
   1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்: நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
   2. பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்.
   3. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை.
   4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
   5. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.

34. ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவல் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும், நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

35. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



36. நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகளை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| | |

**பாடலின் இலக்கிய நயத்தை உணர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

37. "கத்துக்கடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசி வரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்."
   1. இப்பாடலில் ஆசிரியர் யார்?
   2. இப்பாடலில் இடம் பெறும் எதுகையை எழுதுக.
   3. சீர் மோனையைக் கூறு.
   4. அன்னம் - என்பதன் பொருள் கூறுக.
   5. 'ஊரடங்கும்' - இச்சொல்லை பிரித்து எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** [2× 5 = 10]

38. 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

39. அறிவியலாளர் ஸ்டிபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக.

40. நீங்கள் எதிர் கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.(மழை, வெள்ளம், புயல், வறட்சி)

## பிரிவு - 4

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** [2× 5 = 10]

41. விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

நூலக உறுப்பினர் படிவம்
............ மாவட்ட நூலக ஆணைக்குழு
(மைய/கிளை/ஊர்புற நூலகம் -
மாவட்ட மைய நூலகம்)
உறுப்பினர் சேர்க்கை அட்டை

உறுப்பினர் எண் : 41512

அட்டை எண்

1. உறுப்பினர் பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. முகவரி(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
8. பெற்ற மதிப்பெண்கள்
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி

நான் ................ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவுசெய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ................... சந்தா தொகை ரூ. .................. ஆக மொத்தம் ரூ........................ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்கு கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தங்கள் உண்மையுள்ள,
தேதி :

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



42. கீழ்க்கண்ட பத்தியை மொழிபெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

(அல்லது)

(i) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - **Rita Mae Brown**

(ii) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - **Nelson Mandela**

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 16)

**விரிவாக விடையளிக்க.** [2 × 8 = 16]

43. அ) உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தமை குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) மாநில அளவில் நடைபெற்ற "நீரின் பாதுகாப்பு" - என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற நண்பனைப் பாராட்டி வாழ்த்துமடல் எழுதுக.

44. அ) குறிப்புகளைப் பயன்படுத்தி ஒன்றரைப் பக்க அளவில் கட்டுரை வரைக.
குறிப்புகள் : முன்னுரை - வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் - தொன்மைத் தமிழரின் அறிவியல் அறிவாற்றல் - விண்வெளியில் தமிழரின் அறிவியல் அறிவு - விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் - வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக. (முன்னுரை - நுழைவுச்சீட்டு - பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள் - அங்காடிகள் - பிற பொழுதுபோக்கு அம்சங்கள் - முடிவுரை).

☆ ☆ ☆

## விடைகள்

# தமிழ் முதல் தாள்

## பகுதி - I

1. ஆ) கனிச்சாறு
2. அ) பாரதியார்
3. ஆ) கால்டுவெல்
4. ஈ) சருகும் சண்டும்
5. ஈ) தொல்காப்பியம்
6. அ) காற்று
7. ஆ) (ii), (iii) - சரி
8. இ) வெற்றி வேங்கை
9. இ) 583
10. இ) மலைபடுகடாம்
11. ஆ) திணை
12. இ) கூத்தராற்றுப்படை
13. ஈ) சொல்லிசை அளபெடை
14. அ) சங்க இலக்கியம்

## பகுதி - II -பிரிவு - 1

15. (i) இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.
(ii) இது ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளரிடம் உரையாடும். வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது.
(iii) செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்திய வங்கிகள் தயாராகி வருவதற்கு இந்த 'இலா' ஒரு சோறு பதம் ஆகும்.

16. (i) வாருங்கள்
(ii) அமருங்கள்
(iii) தண்ணீர் அருந்துங்கள்!
(iv) உங்களைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டதே! எப்படி இருக்கிறீர்கள்?

17. நான் கற்க விரும்பும் மொழி - இந்தி. இந்தியாவில் பல இடங்களுக்குச் செல்லும்போது மொழி பிரச்சனை வராது. பல நூல்களைக் கற்க ஏதுவாக இருக்கும்.

18. துளிர், முறி, கொழுந்து, குருத்த, கொழுத்தாடை.

19. (i) தெற்கிலிருந்து வீசுவதால் இது தென்றல் காற்று என்று அழைக்கப்படுகிறது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(ii) இக்காற்று மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்த இதமான இயல்புடையதாக இருக்கும்.

20. (i) உண்மையான செல்வம் எது?

(ii) பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று எது?

21. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.

## பிரிவு - 2

22. பெரியாரைத் துணையாகக் கொள்ளாத பாதுகாப்பாற்ற மன்னன். பகைவர் இன்றியும் தானே கெடுவான்.

23. பாணன், பாடினி, கூத்தன், விறலி.

24. (i) மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்கின்ற நோயாளி அம்மருத்துவரை நேசிக்கின்றார். அத்துடன் அம்மருத்துவர் நோயை குணமாக்கிவிடுவார் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்.

(ii) இங்கு மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் நோயாளியைக் குணப்படுத்துகிறது.

25.

| | |
|---|---|
| முன்னைக்கும் முன்னை | பழமைக்குப் பழமையாய் |
| தென்னன் மகளே | பாண்டிய மன்னனின் மகளே |
| மெத்த வணிகலமும் | மிகுதியான வணிகக்கப்பல்கள் |
| நெல்லோடு நாழி கொண்ட | நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் |

26. குசேல பாண்டியன், இடைக்காடனார்.

27. பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே.

28. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.

## பகுதி - III -பிரிவு - 1

29. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன. அன்றாடம் நம் செயல்பாடுகளில் அறிவியலின் பயன்பாடு நீக்கமற நிறைந்துள்ளது. மனிதனின் அன்றாடத் தேவையான நீர், உணவு, உடை எல்லாவற்றிலும் அறிவியலின் வளர்ச்சி பயன்படுகிறது. நாம் பயன்படுத்தும் நீர் குளிர்நீர், வெந்நீர் என இருவகையில் உள்ளது. அவை குறையுடையவையாயின் அவற்றைச் செப்பம் செய்யும் முறைகளுக்கு விஞ்ஞானம் தேவைப்படுகிறது.

நாம் உண்ணும் உணவு சத்து மிகுந்ததாக உள்ளதா, கலப்பின்றி உள்ளதா, வயதுக்கும் தட்ப வெப்ப நிலைக்கும் பொருந்துவதாக உள்ளதா என அறிவதற்கு அறிவியல் சாதனங்கள் தேவைப்படுகின்றன.

விடியலில் எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை நாம் அறிவியலால் உருவான மின்சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். அறுவை சிகிச்சை வரை எல்லாவற்றிற்கும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பயன்படுகின்றன. பள்ளி, கல்லூரிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் எங்கும் நிறைந்த இறைவனைப் போல் அறிவியல் கண்டுபிடிப்புகள் உலகெங்கும் நிறைந்து மனிதனை மேம்படுத்துகின்றன.

31. (i) கண்ணன் வயலில் <u>நெல் நாற்றிற்குத்</u> தண்ணீர் பாய்ச்சினான்.

(ii) தாத்தா நிறைய <u>தென்னம்பிள்ளை</u>களை வாங்கி வந்தார்.

(iii) <u>கத்தரி நாற்றில்</u> வெட்டுக்கிளிகள் இருந்தன.

(iv) <u>மாங்கன்று</u> மழைக்குப் பிறகு தளிர் விட்டுள்ளது.

(v) வாழைமரத்தினடியில் <u>வாழைக்கன்றுகள்</u> உள்ளன.

32. கிழக்கிலிருந்து வீசும்காற்று கொண்டல் எனப்படுகிறது. (கிழக்கு-குணக்கு). மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படுகிறது. (மேற்கு - குடக்கு) வடக்கிலிருந்து வீசும் காற்று வாடை எனப்படுகிறது. (வடக்கு - வாடை). தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் எனப்படுகிறது.

33. (i) Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிறபோது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன் ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



(ii) இதற்கு மாறாக Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன.

(iii) இங்கு என்ற Trans முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. இவ்வாறு இடம் பார்த்து மொழிபெயர்ப்பு முறையாகச் செய்யப்பட வேண்டும்.

## பிரிவு - 2

34.

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் விளங்குகிறது. | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்த வணிகலன் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங் காப்பியங்களை அணிகலன் களாகப் பெற்றுள்ளது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகை யிலிருந்து சங்கப் புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

35. சதம் என்றால் நூறு என்று பொருள். ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம். செய்குத்தம்பிப் பாவலர் 10-3-1907 அன்று சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி சதாவதானி என்று பாராட்டப்பெற்றார்.

36. **இடம் :** பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம்.

**பொருள் :** நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறலாம் என்று ஆற்றுப்படுத்தினான்.

37. **"மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தி :**

(i) "மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.

(ii) அதுபோன்று, "வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்" என்று குலசேகராழ்வார். தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்துகிறார்.

38. (i) **முதற்பொருள் :** நிலம் - காடும் காடு சார்ந்த இடம், பெரும்பொழுது - கார், சிறுபொழுது - மாலை

(ii) **கருப்பொருள் :** நீர், காட்டாறு, மரம் - கொன்றை, காயா பூ - முல்லை, பிடவம்.

(iii) **உரிப்பொருள் :** இருத்தலும் இருத்தல் நிமித்தம்.

## பிரிவு - 3

39. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) | திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| ஆ) | பூத்தொடுத்தல் | உமா மகேஸ்வரி |
| இ) | பரிபாடல் | கீரந்தையார் |
| ஈ) | திருக்குறள் | திருவள்ளுவர் |
| உ) | காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர் |

40. 1. சின்னமனூர்

2. இராமாயணம், மகாபாரதம்

3. சின்னமனூர் செப்பேடுகள்

4. மதுராபுரியில்

5. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம்.

41. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

(அல்லது)

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



42. (i) 1955-ம் ஆண்டு செப்டம்பர் 23-ல் சிசுபவன் என்ற இல்லத்தைத் தொடங்கி, ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய, ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுக்கத் தொடங்கினார்.

(ii) தொழுநோயாளிகளுக்கு நடமாடும் மருத்துவமனையைத் தொடங்கி, அதே ஆண்டு 'காந்தி பிரேம் நிவாஸ்' பெயரில் நிரந்தர தொழுநோய் மருத்துவமனையைத் தொடங்கினார்.

(iii) பல நகரங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, தொழுநோய், காசநோய், பாதித்தவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், அவர்களை மற்றவர்கள் புறக்கணிக்கக்கூடாது என்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தினார்.

(iv) சிறை கைதிகளுக்கும், போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் போதிய உதவிகளுடன், ஆலோசனை மையங்கள் மூலமாக உதவிகள் செய்து வந்தார்.

(v) இந்தியாவைத் தாண்டி பல வெளிநாடுகளுக்கும் 'பிறர் அன்பின் பணியாளர்' சபையினை சேவைகளை விரிவுபடுத்தினார்.

## பகுதி - IV

43. அ)

தமிழரின் பண்பாடுகளுள் முக்கியமானது விருந்தோம்பல். இல்லறக் கடைமைகளில் தலையாயது விருந்து உபசரிப்பதாகும். இதன் அவசியத்தை வலியுறுத்தவே வள்ளுவப் பெருந்தகை விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தை ஒதுக்கியுள்ளார்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 81)

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும். விருந்தினர் விரும்புவது முகமலர்ச்சியுடன் கூடிய அன்பைத்தான் செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்நோக்கி இருக்கும் தமிழினம் நம் இனம்.

அத்தமிழினத்தில் தோன்றிய தமிழர் நாங்கள். எங்கள் இல்லத்திற்கு வரும் விருந்தினரை எங்கள் குடும்பத்தில் ஒருவராக எங்களுடன் இணைந்து இனிமையான தருணங்களை நினைவுகளாக்க நானும் எங்கள் குடும்பத்தினரும் எவ்வாறு உபசரித்தோம் என்பதைக் காண்போம்.

நெல்லையைச் சேர்ந்த எங்கள் குடும்ப நண்பரும் அவருடைய குழந்தைகளும் சென்னையில் உள்ள எங்கள் இல்லத்திற்குக் கோடை விடுமுறையைக் கொண்டாட வந்திருந்தனர். அவர்கள் தொடர்வண்டியில் வந்து இறங்கி அந்நேரத்திலிருந்து எங்கள் விருப்பம் என்று எதையும் நினைக்காமல் அவர்களின் விருப்பமே எங்கள் விருப்பமாயிற்று.

ஒவ்வொரு பொழுதும் புதிதாய்க் கடந்தது. ஒவ்வொரு வேளையும் அவர்களின் குறிப்பறிந்து, விருப்பத்திற்கேற்ப உணவுகளைச் சமைத்து அருகிலிருந்து அன்போடு பரிமாறினோம். வெளியே செல்லும் வேளைகளில் கட்டுச்சோறு கட்டிச் சென்று பழைமையைப் புதுப்பித்தோம். அவர்கள் உறங்கிய பின் உறங்கி அவர்கள் எழும் முன் எழுந்து அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தோம்.

அவர்கள் விரும்பிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றோம். விருந்தினரின் விருப்பத்தை நிறைவேற்றவே காத்திருந்தோம். புத்தாடைகள், புதுவகையான உணவுகள், புதுவகையான விளையாட்டுகள். புதுப்புது இடங்கள் என அனைத்தும் புதுமையாய் இருந்தது. ஆனால் பழங்கதைகள் மட்டும் பழைமை மாறாமல் பேசிச் சுவைத்தோம்.

இவையனைத்தும் எங்கள் குடும்பத்தினருக்கும் அவர்கள் மீதுள்ள பற்றின் புரிதலைத் தந்தது. விருந்துண்டு, நல் அனுபவம் கொண்டு மகிழ்ந்த அவர்கள் மீண்டும் இத்தகு நாள் கிடைக்கப் பெறுமா? என நினைத்த வண்ணமே ஊர் சென்று சேர்ந்ததாகக் கூறினர். தமிழரின் பண்பாடு பாதுகாக்கப்பட்டவை எண்ணி மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

(அல்லது)

ஆ) காற்றின் ஆற்றலை, வளி மிகின் வலி இல்லை என்ற ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். காற்றின் வேகத்தை, கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று மதுரை இளநாகனார் குறிப்பிட்டுள்ளார்.

குப்பைகள், நெகிழிப்பைகள் ஆகியவற்றை எரிப்பதாலும் குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை பயன்படுத்துவதால், மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பதால், போக்குவரத்து வாகனங்களால் நான் மிகுதியாக மாசடைகிறேன்.

44. **முன்னுரை:** கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புச் செய்யப்படும். அரசர்களும் புலவர்களுக்குக் கொடுத்து மகிழ்வர். இறைவனும் அறிவைப் போற்றுவான். அதன்படி, அறிவில் சிறந்த புலவருக்காகத் தூது சென்ற இறைவனையும் இறைவனின் வேண்டுகோளுக்கிணங்கித் தன் தவறையும் உணர்ந்த பாண்டிய மன்னனின் செயலையும் இந்நிகழ்வு மூலம் அறியலாம்.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**இடைக்காடனார் மன்னனின் அவையில் நூலை வாசித்தல்:** பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேலபாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான். கபிலரின் நண்பரான இடைக்காடனார் தாம் இயற்றிய நூலினை வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார். மன்னன் அதனைப் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.

**இறைவனிடம் முறையிடல் :** இடைக்காடனார் மனம் நொந்து, இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! பாண்டிய மன்னர் பொருட்செல்வதோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்.

"மேலும் பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

**இறைவன் கோவிலை விட்டு நீங்குதல் :** இறைவன், கோவிலை விட்டு வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்தார். அதனால் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று தங்கினார்.

**பாண்டிய மன்னனின் வேண்டுதல் :** இறைவன் கோயிலை விட்டு நீங்கியதால் பாண்டியன் "இறைவனே! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் நல்ஒழுக்கத்தில் குறைந்தனரோ? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டினான்

**இறைவனின் பதில் :** இறைவன் மன்னனிடம், "சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒரு போதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்" என்று கூறினார்.

**பொறுத்தருள்க இறைவா! :** வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "உமையை ஒரு பாகத்தில் கொண்ட மேலான பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டிப் போற்றினான்.

**மன்னன் புலவருக்கு மரியாதை செய்தல்:** இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டினான் பாண்டிய மன்னன். மன்னனது மாளிகை, வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது. அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரண கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

**புலவரிடம் மன்னிப்பை வேண்டினான் :** பாண்டியன், "புண்ணிய வடிவான புலவர்களே, நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று மிகவும் பணிவுடன் வேண்டினான்.

**புலவர்களின் பதிலுரை :** நுட்பமான கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்று மனநிறைவுடன் கூறினர்.

**முடிவுரை:** இவ்வாறு மன்னனின் தவறைச் சுட்டிக்காட்டி இடைக்காடனாரின் வருத்தத்தைப் போக்கினார்.

(அல்லது)

ஆ) மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழ்த்தாயை வாழ்த்தியமையைப் பார்ப்போம்.

பெ. சுந்தரனார் அலைகடலை ஆடையாக அணிந்த பூமிப் பெண்ணிற்குப் பாரத கண்டம், முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார். அம்முகத்திற்குத் தென்திசை நாடுகள் பிறைநிலவு போன்ற நெற்றியாகவும் அந்நெற்றியில் நறுமணம் மிக்க திலகமாய்த் தமிழகம் உள்ளதாய்க் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல் திலகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல் தமிழ்த்தாயும் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றவளாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய்த் தோன்றியவள், குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் மண்ணுலகப் பேரரசு, பாண்டிய மன்னனின் மகள் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றுத் திகழ்வதாகக் கூறியுள்ளார். அதனையே பெருஞ்சித்திரனார் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் பதினெண் மேல்கணக்கு, கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்களாய் எல்லாத் திசையிலும்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



பரவியுள்ளாள். பொங்கியெழும் இந்நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்கிறார்.

உலகின் மூத்தமொழியாக இருந்தும் இன்றளவும் இளமையாக இருக்கின்றாள் என்று சுந்தரனார் பாடுகிறார். பெருஞ்சித்திரனார் இதனைப் பழமைக்குப் பழமை என்கிறார்.

சுந்தரனார் தமிழ்மொழியின் வளம் பெருகுகின்றதே தவிர குறையவில்லை என்கிறார். இதனைப் பெருஞ்சித்திரனார் தமிழ் பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டுள்ளது என்கிறார். மேலும் "வியக்கத்தக்க நீண்ட உன் நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன" என்கிறார்.

சுந்தரனார் தமிழே, தமிழாகிய பெண்ணே, தாயே உன்னை வாழ்த்துகிறேன் என்கிறார். பெருஞ்சித்திரனார், எம் தனித்தமிழே! உள்ளத்தில் கனல் மூள, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று பாடியுள்ளார்.

இவ்வாறு மனோன்மணீயம் பெ. சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி வாழ்த்துகின்றனர்.

☆ ☆ ☆

## விடைகள்

# தமிழ் இரண்டாம் தாள்

### பகுதி - I

1. இ) எம் + தமிழ் + நா
2. ஆ) அன்மொழித்தொகை
3. இ) வினைமுற்றுத்தொடர்
4. இ) திணை வழுவமைதி
5. ஆ) 8
6. அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
7. ஆ) தொடர்மொழி
8. இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
9. அ) ஆடு மேய்ந்தது
10. ஆ) அறியா வினா, சுட்டு விடை
11. ஆ) எழுது எழுது என்றான்
12. இ) தோப்பு
13. ஈ) பண்புத்தொகை
14. அ) விளக்கு

### பகுதி - II -பிரிவு - 1

15. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதி ஆயினர்.
16. ஆய்வக ஆய்வை மீண்டும் செய்து விடையைக் கண்டுபிடியுங்கள். நல்வாழ்த்துகள்.
17. காட்சி, காணுதல்
18. **விதி**யை நினைத்து **வீதி**யில் அமர்ந்தேன்.
19. அ) வீடுகளில் அழகான மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

    ஆ) சிறந்த கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
20. உம்மைத்தொகை - கீரி பாம்பு போல இருவரும் சண்டை போடுகின்றனர்.
21. Emblem - சின்னம்

    Conversation - உரையாடல்

### பிரிவு - 2

22. (i) வேங்கை என்பது தனிமொழியாகி மரத்தையும், புலியையும் குறிக்கும்.

    (ii) வேம் + கை எனத் தொடர்மொழியாக பிரிந்து வேகின்ற கை எனப் பொருள் தரும்.

    (iii) இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாக இருக்கிறது.
23. கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை.
24. அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா புறப்படும் போது அம்மா வழியனுப்பினார்.
25. ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் ஆகும்.

    சான்று : வருக! வருக! வருக!
26. வெண்டைக்காய் - இருபெயராட்டுப் பண்புத்தொகை

    மோர்க்குழம்பு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
27. சுட்டு விடை, மறை விடை, நேர் விடை ஆகிய மூன்றும் நேரடி விடைகள் ஆகும்.
28. பொறித்த - பொறி + த் + த் + அ

    பொறி - பகுதி

    த் - சந்தி

    த் - இறந்தகால இடைநிலை

    அ - பெயரெச்ச விகுதி

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com


29. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**சான்று :**

'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கோடி
வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட'

**பாடலின் பொருள் :** கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

**அணிப்பொருத்தம் :** கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகக் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது **தற்குறிப்பேற்ற அணி** எனப்படும்

30.

| | | |
|---|---|---|
| இடிப்/பா/ரை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| ஏ/மரா | நேர் நிரை | கூவிளம் |
| மன்/னன் | நேர் நேர் | தேமா |
| கொடுப்/பார் | நிரை நேர் | புளிமா |
| இலா/னும் | நிரை நேர் | புளிமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பாவின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

31. **வினா வகைகள் :** அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல் வினா.

(i) **அறிவினா :** தான் விடை அறிந்திருந்தும் அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது.

**எ.கா :** மாணவரிடம் "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று ஆசிரியர் கேட்டல்.

(ii) **அறியா வினா :** தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது.

**எ.கா :** ஆசிரியரிடம் "இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று மாணவர் கேட்டல்.

(iii) **ஐயவினா:** ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது.

**எ.கா :** "இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?" என வினவுதல்.

(iv) **கொளல் வினா :** தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது.

**எ.கா :** ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா என்று நூலகரிடம் வினவுதல்.

(v) **கொடை வினா :** பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது.

**எ.கா :** "என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?" என்று கொடுப்பதற்காக வினவுதல்.

(vi) **ஏவல் வினா :** ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது.

**எ.கா :** "வீட்டில் தக்காளி இல்லை நீ கடைக்குச் செல்கிறாயா?" என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

## பகுதி - III -பிரிவு - 1

32. ஓடி வந்தாள் - அம்மா சொல்லாதே
அரசர் தந்தார் - அரசே தருக!
பார்த்த துளிர்.

33. 1. நறுமணம்
2. புதுமை
3. காற்று
4. விண்மீன்
5. காடு

34. (i) பாதுகாப்பான இடங்களுக்கு கூட்டிச் செல்வேன்.
(ii) மின்சார விளக்குகளை அணைத்து விடுவேன்.
(iii) மேடான பகுதிகளில் தங்க வைப்பேன்.
(iv) வீட்டிலுள்ள கதவு, ஜன்னல்களை மூடி வைப்பேன்.
(v) முதலுதவிச் சாதனங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பேன்.
(vi) அறிவிப்பைக் கேட்டவுடன் குறைந்தது ஏழு நாளுக்குத் தேவையான உணவுப் பொருள், எரிபொருள், குடிநீர், உயிர்காக்கும் மருந்து முதலியவற்றை வாங்கி வைத்துக் கொள்வேன்.

35. ஒவ்வொரு மனிதனையும்,
இந்த உலகத்தையும்
ஆள்கிறது.
அவை இல்லாமல்
மனிதன் இல்லை
மனிதனோடு

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



ஒட்டிப் பிறந்த உறவாய்
இருக்கிறது - மனிதன்
உயிரைவிட
உறவுகளைவிட
பெரிதும் மதிப்பது
காசுக் கொடுத்து வாங்கி
கடவுளாக நினைக்கிறான்
மனிதனோடு இருந்து
மனிதனை அடிமையாக்கிறது
கைப்பேசி!

36.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | உடன் பிறந்தவர் களுடன் பாசமாக இருப்பேன். |
| ஆசிரியரை மதித்து நடப்பேன். | பெற்றோர்களை மதித்து நடப்பேன். |

37. 1. காளமேகப்புலவர்

2. க**த்**துக்கல் - கா**த்**தான் - அடி எதுகை
உ**லை**யிலிட - இ**லை**யிட - அடி எதுகை

3. **க**த்துக்கல் - **கா**த்தான் - சீர்மோனை
**அ**த்தமிக்கும் - **அ**ரிசிவரும் - சீர்மோனை

4. சோறு

5. ஊர் + அடங்கும்

## பிரிவு - 3

38. **முன்னுரை :**

பருத்திக்காட்டில் வேலைசெய்யும் பாட்ஸி, சாம் இவர்களின் மகள் மேரி. படிப்பறிவற்ற இவர்களின் குடும்பத்தில் முதல் கல்விச்சுடர் ஏற்றியவர் கருப்பர் இனத்தைச் சார்ந்த மேரி. அதற்கான சூழல் ஏற்பட்டதையும் அதனைச் சிரமேற்கொண்டு பணியாற்றிய மேரியையும் இக்கதை மூலம் அறியலாம்.

**பருத்தித் தோட்டத்தில் மேரி :**

மேரிஜேன் மிகவும் வித்தியாசமான பெண். இவர்களுடைய குடும்பம் பகல் நேரத்தில் பருத்தித் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு மாலை நேரத்தில் ஒன்றாகச் சேர்ந்து பாடுவதும் பிரார்த்தனை செய்வதுமாக இருக்கும்.

பருத்திச் செடிகளை அவள் கவனமாகப் பார்த்துக் கொள்வாள். காரணம் முதல் பூவை அவள் பார்க்க வேண்டும் என்பதுதான். இரவில் தெரியும் நிர்மலமான வானம் கண்சிமிட்டும் நட்சத்திரங்கள் இவற்றைப் பார்ப்பதும் இலக்கற்றுச் சிந்திப்பதும் அவளுக்குப் பிடிக்கும்.

மேரியின் மனவருத்தம் :

ஒரு நாள் மேரி வெள்ளைக் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு அங்குச் சென்றாள். ஒரு வெள்ளைச் சிறுமி உள்ளே வர விரும்புகிறாயா? எனறு கேட்டாள்.மேரியும் ஆர்வமிகுதியால் உள்ளே சென்றாள். அங்கிருந்த விளையாட்டுப் பொருட்களும் புத்தகமும் மேரியின் கவனத்தை ஈர்த்தன. புத்தகத்தை மேரி எடுத்தாள். அந்த வெள்ளைச் சிறுமி புத்தகத்தை என்னிடம் கொடு நீ இதை எடுக்கக்கூடாது. உன்னால் படிக்க முடியாது என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள்.பத்திரமாகவைத்திருப்பதாகக் கூறியும் கேட்கவில்லை. மேரியினால் அதைப் படிக்க முடியாது என்றும் கூறினாள். மேரி மனம் துவண்டு போனாள். நட்புணர்வற்ற அந்த இடத்திலிருந்து அவள் வெளியேறினாள்.

**மேரியின் மனவோட்டம் :**

அந்த நாள் முழுவதும் அவள் துயரத்துடன் இருந்தாள். ஆம் நான் படிக்க வேண்டும். நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் எழுதப் படிக்கப் போகிறேன் என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டே இருந்தாள். மேரி தந்தையிடம் பள்ளிக்கூடம் செல்வது பற்றிக் கேட்டாள். அவர் "இங்கே நமக்கென்று பள்ளிக்கூடமே கிடையாதேம்மா" என்று கூறினார். "நான் படிக்க விரும்புகிறேன், நான் படிக்க விரும்புகிறேன்" என்று கூறிக்கொண்டே இருப்பாள்.

**புதிய நம்பிக்கை :**

மிஸ் வில்ஸன் மேரியைப் பார்த்து உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். உன்னுடைய பருத்தி எடுப்பு வேலையை விரைவாக முடித்துவிட்டு மேரியஸ்வில்லிக்கு வந்துவிடு சரியா மேரிக்குட்டி வருவாய்தானே என்று கேட்டார். மேரி பதில் சொல்ல நா எழாமல் வாயடைத்து நின்றாள். பிறகு பருத்தி எடுக்கும் வேலையைத் தொடர்ந்தாள். எல்லோரையும் அவசரப்படுத்தினாள். ஒரு புதிய மனுசியாக ஆகிவிட்டதைப் போல் மற்றவர்கள் உணர்ந்தனர். உன்னால் படிக்க முடியாது என்று மேரியின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்த இந்த வார்த்தைகள் அவளுடைய

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆத்மாவில் இருந்து துடைத்தெறியப்படப் போகின்றன. அக்குடும்பத்திலிருந்து முதல் பெண் படிக்கப்போகிறாள். புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது.

**மேரி பெற்ற கல்வியின்பம் :**

பள்ளிக்குச் செல்வதற்குத் தயாரானாள் மேரி. புதிதாக சிலேட், சாக்பீஸ் வாங்கினாள். முதல் நாள் மேரியின் சகோதரர்களும் சகோதரிகளும் நீ எங்களுக்கும் சொல்லித்தர வேண்டும். சரியா? என்றார்கள். மேரி ஓ யெஸ் நான் கற்றுக்கொண்டதை எல்லாம் உங்களுக்கும் சொல்லித் தருகிறேன் என்று உறுதியளித்தாள்.

மேரிஜேன் தான் பெற்ற புதிய கல்வியினால் முக்கியமான ஒரு நபராக மாறிக் கொண்டிருந்தாள். அக்கம்பக்கத்தாரின் சம்பளக்கணக்கு, கொடுக்கல் வாங்கல் குழறுபடிகளைத் தீர்த்தாள்.

**பட்டமளிப்புவிழா :**

பள்ளியில் புதிது புதிதாய்க் கற்றாள். தனது பாதையில் உயர்ந்தாள். சில வருடங்களுக்குப் பிறகு பட்டமளித்தல் விழாவும் நடந்தது. தங்கள் வாழ்வில் காணும் முதன்முதல் பட்டமளித்தல் விழா என்பதால் மேயெஸ்வில்லியின் மக்களுக்கும் அது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. மதிப்புமிக்க வெள்ளைத்தாள் சுருள்களில் அளிக்கப்பட்ட டிப்ளமோ பட்டத்தை வாஞ்சையுடன் பெற்றுக் கொண்டாள். இனி மேரியைப் பார்த்து உன்னால் படிக்க முடியாது என்று அவளை வேதனைப்படுத்த முடியாது

**மேரியின் மேல்படிப்பு :**

ஒரு நாள் வில்ஸன் மேரியிடம் மேற்குப் பகுதியில் வாழும் வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பினைக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பியதாகவும் அதற்கு உரியவள் மேரி என்றும் கூறினார். மேல்படிப்புக்கு டவுனுக்குப் போகவேண்டும் என்றும் கூறினார். இதையறிந்த அப்பகுதிவாழ் மக்கள் அனைவரும் பெருமிதம் அடைந்தனர். அவள் டவுனுக்குப் புறப்பட்டபோது அவளைப் பண்ணை வாகனத்தில் அழைத்துச் சென்றார் அண்டை வீட்டுக்காரர் ஒருவர்.

மேலும் "இந்த மாதிரி ஒரு முக்கியமான நாளில் நீங்கள் நடந்து போகக்கூடாது" என்று கூறி அழைத்துச் சென்றார். மேரி ரயில் நிலையத்தை அடைந்தபோது ஒரு பெரிய கூட்டமே அவளுடன் வந்திருந்தது. மேரியை அணைத்துக்கொண்ட மிஸ் வில்ஸன் அவள் செல்ல வேண்டிய இடம் சந்திக்க வேண்டிய ஆசிரியர் பற்றிய குறிப்புகளை விளக்கிச் சொன்னார்.

**முடிவுரை :**

மனதில் ஆர்வமும் எண்ணத்தில் முயற்சியும் இருந்தால் சாதிக்கலாம் என்பதற்கு மேரியின் வாழ்வில் அவள் பெற்ற கல்வி சான்றாகிறது. உலகில் சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக உருவாக்குகிறார்கள். அவ்விதமாக மேரி ஒற்றைச்சுடராக வந்து ஓராயிரம் சுடரை ஏற்றிவிட்டார்.

39. **அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்:**

பள்ளியில் நடைபெற்ற அறிவியல் தொடர்பான தேர்வில் நான் வெற்றி பெற்றேன். நான் மாநிலத்திலேயே முதலாவதாக வந்துள்ளேன். இது போல பல மாநிலங்களிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். என்னுடைய மின்னஞ்சலில் எனக்கு ஓர் அழைப்பிதழ் வந்திருந்தது. என்னை அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணத்துக்கு அழைத்துச் செல்லும் அழைப்பிதழ்தான் அது.

நான் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் நாளும் வந்தது. நானும் அறிவியலாளர் மட்டுமே செல்லவிருப்பதாகக் கூறினர். எனக்கு அளவில்லா ஆனந்தம்.

நாங்கள் இருவரும் விண்கலத்திற்கு லிப்டு(தானியங்கி தூக்கி) மூலம் சென்றோம். அது ராக்கெட்டின் உச்சியில் பொருத்தப்பட்டிருந்தது. ராக்கெட் புறப்படும்போது எனக்குப் புதுவிதமான அனுபவம் கிடைத்தது. சிறிது நேரத்தில் விண்வெளியில் நுழைந்துவிட்டது விண்கலம். புவி ஈர்ப்பு விசையற்ற இடத்திற்குச் சென்றுவிட்டோம்.

விண்வெளியில் சுற்றிக் கொண்டிருந்தோம். மிக அருகிலேயே சூரிய உதயத்தைப் பார்த்தோம். சூரியனிடமிருந்த வந்த கதிர்களில் வானவில் தோன்றியது. வானவில்லைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ந்தேன். அறிவியலாளர் விண்வெளியில் படர்ந்துள்ள விண்மீன்களைச் சுட்டிக்காட்டினார். பூமியைப் பார்த்தது போலவே மற்ற கோள்களையும் அவற்றின் நிறம், வடிவம் பற்றியும் ஸ்டீபன் மிகவும் எளிமையாகக் கூறினார். அவர் கூறிய விளக்கம் என் எண்ணத்தை விட்டு நீங்காது எனில் மிகையாகாது.

பிறகு வானில் பரவியுள்ள ஓசோன் படலத்தைப் பற்றிக் கூறினார். புறஊதாக் கதிர்கள் பற்றியும் நாம் வீட்டில் பயன்படுத்தும் குளிரூட்டும் பெட்டியினால் விளையும் தீமையைப் பற்றியும் விளக்கினார்.

அவருடைய அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவருடன் சென்ற விண்வெளிப் பயண அனுபவங்கள் பற்றி நான் என் பள்ளியில் உள்ள நண்பர்களிடமும் என் உறவினர்களிடமும் பகிர்ந்து கொண்டேன்.

40. **வெள்ளம் :**

எனக்கு மட்டுமல்ல சென்னை வாசிகள் பலருக்கும் பீதியான சூழ்நிலையை தொடங்கி வைத்த நாள். தீபாவளியின் போதும், அதன் பின்னரும் பெய்தது போன்று அன்றும் மழை கொட்டத் தொடங்கியது. முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று வீட்டுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு, குண்டும், குழியுமான சாலைகளைக் கடந்தும், கழிவு நீர் துவாரங்களிலிருந்து தப்பியும் வீடு வந்து சேர்வது சென்னைவாசிகளுக்கு பழகிப்போன ஒன்றாகி விட்டது.

அதே போன்று ஒரு மழையாகத்தான் இதுவும் இருக்கும் என்று சாதாரணமாக நினைத்தது தவறாகிப்போனது. சென்னையின் மைய பகுதியில் வசிப்பதால் பாதுகாப்பை பற்றி யோசித்ததே இல்லை. வழக்கமான அன்றைய பணிகளை முடித்து விட்டு, தொலைகாட்சியில் கண்களை ஓட்டினேன். மழை செய்திகளாக வந்து கொண்டிருந்தது. புற நகர் பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் ஏற்பட்ட சேதச்செய்திகளை பார்த்தேன். சில அலைவரிசையில் மழை வெள்ளம் பற்றிய விவாதங்கள்... ஓடின. நானும் என் பங்கிற்கு 'கொஞ்சம் கூட யோசிக்காமல் தாழ்வான இடங்களிலும், குளம், ஏரி பகுதிகளில் போய் ஏன் வீடு வாங்கிவிட்டு இப்போது புலம்புகிறார்கள்..' என்று எனக்குள் யோசித்தும் கொண்டேன். மறு நாள் எனக்கும் இதேப்போன்று ஒரு ஆபத்து காத்திருந்ததை உணராதவனாக பணிச்சுமை அசதியில் அன்று சீக்கிரமே தூங்கப் போய்விட்டேன்.

காலை மணி ஆறு. தூக்கம் கலையாத அந்த நேரத்தில் திடீரென என் அப்பா கூப்பிடும் சத்தம். கூடவே, வெளியே சாலையில் சைரன் வாகனங்களின் சத்தம். "தண்ணீ, தண்ணீ..." என்று சத்தமிட்டனர். அப்போது "வீட்டுக்குள் தண்ணீ வந்திடுச்சு..." என்கிற அப்பாவின் பதட்டமான குரலை கேட்டு அவசரமாக எழுந்து வெளியே வந்து பார்த்தால் எங்கள் வீட்டை ஒட்டிய சாலைக்குள் திபு திபு வென்று வெள்ளம் போல நீர் வந்து கொண்டிருக்கிறது. அப்போது மழை எதுவும் இல்லாததால் எங்கிருந்து இவ்வளவு தண்ணீர் வருகிறது என்று குழப்பத்தில் சாலைக்கு ஓடினேன். முட்டிவரை வெள்ளம். என்னைப்போல் பலர் அங்கே பக்கத்து சாலைகளில் இருந்து வரும் தண்ணீரை பார்த்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். மளமளவென எங்கள் வீடுகளுக்குள் தண்ணீர் வராமல் இருக்க தடுப்புகள் வைத்தோம்...

ஆற்றிலிருந்து தூரத்தில் நாங்கள் இருந்தாலும் முதல்முறையாக எங்களையும் புறநகர் வாசிகளாக்கியது வெள்ளம் என புரிந்து கொண்டேன். உடனடியாக மின்சாரம் நிறுத்தப்பட்டது. பின்னர், தொலைப்பேசி இணைப்புகளும் ஒன்றன் பின் ஒன்றாக செயல் இழந்தன. உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் தவித்தோம். ஆனால் பல நல்ல உள்ளங்களால் உயிர் பிழைத்து உயிர் வாழ்ந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிவு - 4

41. நூலக உறுப்பினர் படிவம்

........... மாவட்ட நூலக ஆணைக்குழு
(மைய/கிளை/ஊர்புற நூலகம் -
மாவட்ட மைய நூலகம்)
உறுப்பினர் சேர்க்கை அட்டை

உறுப்பினர் எண் : 41512

அட்டை எண் - 126

1. உறுப்பினர் பெயர் : மாதவி அ.
2. தந்தை பெயர் : அன்பரசன் பி
3. பிறந்த தேதி : 19-5-2002
4. வயது : 15
5. படிப்பு : பத்தாம் வகுப்பு
6. தொலைபேசி எண் : 7653 000000
7. முகவரி(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
8. பெற்ற மதிப்பெண்கள் : 420
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி
அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை - 26.

நான் அமைந்தகரை மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. 600 சந்தா தொகை ரூ. 60 ஆக மொத்தம் ரூ. 660 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்கு கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : அமைந்தகரை தங்கள் உண்மையுள்ள,
தேதி : 20-4-2019 மாதவி. அ

42. காலை நேரத்தில் பொன்னிறக் கதிரவன் தன் ஒளிமிக்க கதிர்களால் இருளை விரட்டும். பால் வண்ண மேகங்கள் அலைகளைத் தொடங்குகின்றன. வண்ண வண்ணப் பறவைகள் தங்கள் காலைநேரத்தை மெல்லிசையோடு ஆரம்பிக்கின்றன. அழகான வண்ணத்துப்பூச்சிகள் பூக்களைச் சுற்றி நடனமாடும். பூக்களின் மணம்

காற்றை நிரப்பும். காற்று மென்மையாய் எங்கும் வீசி அனைத்தையும் இனிமையாக்கும்.

(அல்லது)

1. கலாச்சாரத்திற்கான பாதையின் வரைபடம் மொழியாகும். அது தன் மக்கள் எங்கிருந்து வந்தனர்; எங்கு செல்கின்றனர் என்பதை நமக்குக் கூறும். **– ரீட்டா மே ப்ரௌன்**

2. ஒரு மனிதனிடம் அவருக்கு புரிகிற மொழியில் பேசினால் அது அவர் தலைக்குள்(மூளைக்குள்) செல்லும். ஆனால் அவருடைய தாய்மொழியில் பேசினால் அது அவர் இதயத்திற்குள் செல்லும். **– நெல்சன் மண்டேலா**

## பகுதி - IV

43. அ)

**அனுப்புநர்**

செல்வம் . ம

எண் 20, காந்தி சாலை, மதுரை.

**பெறுநர்**

உயர்திரு உணவுப் பாதுகாப்பு ஆணையர்,

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம்,

சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** உணவு விடுதியில் தரமற்ற உணவு அளித்தது மற்றும் கூடுதல் விலை பெற்றது தொடர்பாக.

வணக்கம். நான் என் குடும்பத்தினருடன் மதுரை பேருந்து நிலையத்தில் இருக்கும் ஒரு புகழ்பெற்ற விடுதியில் உணவு உண்டோம். அங்கு அளிக்கப்பட்ட உணவு தரமற்றதாக இருந்தது. அதனால் அவ்வுணவினை உண்ட பிறகு எங்களுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு விட்டது. மேலும் அவ்வுணவிற்கான விலையும் கூடுதலாக வசூலித்தனர்.

தரமற்ற உணவு அளவு, குறைவாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. அவ்வுணவு விடுதியில் தயாராகும் உணவினைத் தரப் பரிசோதனை செய்ய வேண்டும். இது என்னுடைய வேண்டுகோள் மட்டும் இல்லை. என்னைப் போல் பிறருடைய எதிர்பார்ப்பும் இதுதான். கூடுதல் விலை வசூலிப்பதற்கான காரணத்தையும் அறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இக்கடிதத்துடன் தரமற்ற உணவிற்கான சான்றும் கூடுதல் விலைக்கான சான்றும் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
செல்வம் .ம

**உறைமேல் முகவரி**

பெறுநர்
உணவுப் பாதுகாப்பு ஆணையம்,
உணவுப் பாதுகாப்பு மற்றும்
தரப்படுத்தல் ஆணையம்,
சென்னை.

(அல்லது)

ஆ) காந்தி தெரு,
திருவள்ளூர்,
1.3.2019

அன்புள்ள கபிலனுக்கு,

வாழ்க வளமுடன்,

மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றதற்கு வாழ்த்துகள்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' இத்தொடரை நீ மெய்ப்பித்தாய்!

'சித்திரமும் கைப்பழக்கம்' இதை நீ சிரமேற்கொண்டாய்! வெற்றியும் பெற்றாய்!

'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்பதைப் போல உன் அறிவுப் பெருக்கத்திற்கேற்ற பரிசினைப் பெற்றாய்!

உன் அழகான கையெழுத்திற்கு ஈடுஇணையுண்டோ? இப்பயணம் தொடரட்டும்! என்றென்றும் உன்புகழ் வளரட்டும்!

என்றும் அன்புடன்
அன்புச்செல்வன்

**உறைமேல் முகவரி**

பெறுநர்
கபிலன்
15, அண்ணாநகர்,
சென்னை-40

44. அ)

**முன்னுரை :**

விண்வெளியில் கால் பதித்த முதல் இந்திய பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பனா சாவ்லா அவரைப் பற்றிய கட்டுரையில் காண்போம்.

**வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் :**

இன்றைய அறிவியல் உலகம் சுருங்கிவிட்டது. எந்த ஒரு மூலையில் நடக்கக்கூடிய எந்த ஒரு

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com



செய்தியையும் விரல்நுனியில் நாம் பார்க்க முடிகிறது. இயந்திர மனிதர்கள் மூலம் அறுவை மருத்துவமும் வேறு கடினமான வேலைகளையும் செய்து வருகிறோம். பூமியில் இருந்துகொண்டே வானத்தில் என்ன நடக்கின்றன என்பதை ஆராய்வதற்காக பல விண்கலங்களை வானத்தில் அனுப்பியுள்ளோம்.

**தமிழரின் அறிவாற்றல் :**

தமிழன் அறிவியல் முன்னோடி அறிவியல் தோன்றுவதற்கு முன்னரே தமிழன் அறிவியல் பற்றிய சிந்தனைகளை சிந்தித்துள்ளனர். அவற்றை சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. பொறியியல் அறிவு, கட்டடவியல் அறிவு, மண்ணியல் அறிவு, கனிமவியல் அறிவு, மருத்துவ அறிவு பல்வேறு வகையான அறிவியல் பிரிவுகளை அன்றைய தமிழ் மக்கள் அறிந்து செயல்படுத்தி இருந்தனர்.

**விண்வெளிப் பயணம் :**

1995-ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த கல்பனா சாவ்லா, கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87-இல் பயணம் செய்வதற்குத் தேர்வுச் செய்யப்பட்டார். முதல் இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் - 87-இல் விண்வெளி பயணம் மேற்கொண்டார். இந்த விண்வெளி பயணத்தில் சுமார் 372 மணி நேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார்.

பின்னர் 2003-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பிய விண்கலம் எஸ்.டி.எஸ். 107-இல் அனுப்பி வைத்தனர். 16-நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பிப்ரவரி-1 ஆம் தேதி பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அமெரிக்காவின் டெக்சாஸ் வான்வெளியில் வெடித்துச் சிதறியது. இதில் கல்பனா சாவ்லா உள்பட 7 பேரும் விண்வெளி வீரர்களும் பலியாகினர்.

**முடிவுரை :**

அறிவியலை உலகிற்கு தந்தவன் தமிழன் அத்தகைய தமிழனாய் பிறந்து, அறிவியல் துறையில் எண்ணற்ற சாதனைகளை செய்ய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

(அல்லது)

ஆ) **முன்னுரை :**

சென்ற வாரம் நான் சென்னையில் உள்ள தீவுத்திடலில் நடைபெறும் பொருட்காட்சிக்குச் சென்றேன். என்னுடன் என்னுடைய நண்பர்களும் வந்தனர். ஒருநாள் முழுவதும் நாங்கள் மிகவும் உற்சாகத்துடன் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்தோம்.

**பல்துறைக் கண்காட்சி அரங்கங்கள் :**

பொருட்காட்சியில் அரசுத்துறை அரங்குகள், மத்திய அரசு நிறுவனங்களின் அரங்குகள், நூற்றுக்கணக்கான கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அத்திடலில் பலரும் அமர்ந்து பார்ப்பதற்கு ஏதுவாய் பெரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. நுழைவுவாயில் மிகவும் பெரிய அளவில் பிரம்மாண்டமாய் இருந்தது.

பொருட்காட்சித் திடலில் உள் நுழைந்ததும் அரசுத் துறை அரங்குகளான மின்சாரத்துறை, வேளாண்துறை, காவல்துறை போன்ற பலதுறை அரங்குகளைக் கண்டு களித்தோம். மின்சாரத்துறை அரங்கில் மின்சாரம் எவ்வாறெல்லாம் கிடைக்கிறது என்பதை விளக்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. மின்னாற்றல் பற்றியும் அறிந்தோம்.

வேளாண்துறையில் இயற்கை வேளாண்மை, வேளாண்மை சங்க காலம் முதல் தற்காலம் வரை ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து விளக்கியிருந்தனர். பால்வளத்துறையில் உள்ளே நுழையும்போதே தமிழரின் விருந்தோம்பலைப் போற்றும்விதமாய் அனைவருக்கும் பால் வழங்கப்பட்டது. காவல்துறை அரங்கில் சட்டம், ஒழுங்கு மற்றும் போக்குவரத்துத் துறையினர் சாலையில் ஏற்படும் விபத்துகள் குறித்தும் சமூகக் கேடான செயல்கள் பற்றியும் காட்சிப்படுத்தி நமக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இவையெல்லாம் ஒரு சோற்றுப்பதம் தான்.

இரயில்வே துறை, போக்குவரத்துத் துறை அரங்குகளும் எங்களை மகிழ்வித்தன. பல பொருட்கள் விற்கும் கடைகளும் பிற மாநிலங்களால் உருவாக்கப்பட்ட பொருட்கள் விற்கும் கடைகளும் பார்க்கவே நன்றாக இருந்தது.

**பிற பொழுதுபோக்கு அம்சங்கள் :**

சூரியன் மறைவுக்குப் பிறகு அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் பலவித கலைநிகழ்ச்சிகள் நிகழத்தப்பட்டன. என் பெற்றோர் எனக்கும் என் நண்பர்களுக்கும் நொறுக்குத் தீனி வாங்கிக் கொடுத்தார்கள். அதனைக் கொறித்துக் கொண்டே மேடை நிகழ்ச்சியைக் கண்டு களித்தோம்.

**முடிவுரை :**

அன்று நேரம் போனதே எங்களுக்குத் தெரியவில்லை. தீவுத்திடலில் அலைகடலென மக்கள் கூட்டம், எங்களைத் திக்குமுக்கடாச் செய்துவிட்டது. மீண்டும் வரவேண்டும் என்ற எண்ணிக்கொண்டே பொருட்காட்சியை விட்டு வெளியேறினோம்.

☆☆☆

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com